அல்லது வேறு ஏதேனும் முயற்சிகள் நடைபெறுகிறதா என்று நீங்கள் நினைக்கலாம். இன்றைய முதல் வாசகத்தின் ஆசிரியரைப்போலவே நீங்கள் விரக்தியுடன் சிந்திக்கலாம்.'வீண், முற்றிலும் வீண்'

இருந்தபோதும் இயேசு நம் உலக வாழ்க்கையைத் தாண்டியும் பார்க்க நம்மை அழைப்பதை அவர் நிறுத்தவில்லை. நாம் வாழும்படிக்கு நம்மை அழைக்கிறார், தற்காலிகமாக அல்ல; நிலைவாழ்வின் கருவூலங்களுக்காக நம்மை அழைக்கிறார். இரண்டாம் வாசகத்தில் கொலோசையருக்கு எழுதிய கடிதத்தில் பவுல் இவ்வாறு நம்மை அழைக்கிறார். "நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்கு தான் கிறிஸ்து இருக்கிறார்.

மறைபோதகம் என்பது இதுதான். பவுலைப் போலவே திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு நபரும் கிறிஸ்துவின் அழைப்பை எதிரொலிக்கவும் நிலையான செல்வத்தின் ஊற்றாகிய அவரில் நாம் கண்ட கருவூலங்களை மற்றவர்களுக்குக் கொண்டுசெல்லவும் கடமைபட்டுள்ளோம். கடவுளின் அன்பை அறிந்தபிறகு, நாம் பெற்ற எதிர்நோக்கு தேவைப்படும் மற்றவர்களுடன் நமது நம்பிக்கையை பகிர்ந்துகொள்ள நமது முயற்சிகளில் தாராள உள்ளத்தினராய் இருப்பது நம்முடைய பொறுப்பாகும்.

எனவே மறைக்கல்வி ஞாயிறு மற்றும் வரவிருக்கும் ஆகஸ்ட மாதத்தின் வாரங்களில் விண்ணகத்தை நோக்கிய நமது தனிப்பட்ட பயணத்தில் மட்டுமல்ல, மற்றவர்களையும் நம்பிக்கையின் பாதையில் வழிநடத்துவதில் நமது பொறுப்பையும் பிரதிபலிக்க இது ஒரு நல்வாய்ப்பாகும். வகுப்பறைகளில் மறைபோதக ஆசிரியர்களாக இருக்க நாம் அனைவரும் அழைப்புப் பெறவில்லையென்றாலும், நம்முடைய சொந்தவழிகளில் மறைக்கல்வியை நம்மால் பணிசெய்யும் உள்ளத்தோடு இணைந்து செயலாற்றமுடியும். இல்லத்தில், பணியிடத்தில், பள்ளியில் அல்லது நாம் எங்கிருந்தாலும் நாம் சந்திக்கும் ஒவ்வொருவரிடத்திலும் நம் சொந்த நம்பிக்கையை எதிரொலிப்பதன்முலம் மறைபோதகத்தை நாம் ஆதரிக்கமுடியும்.

இந்த நாள் நம்மையும் தாண்டி நம்மை ஆட்கொள்ளட்டும். நமது உலகியல் வளங்கள், நமது நேரம், திறமைகள், பொருள் உடைமைகள் மீதான நமது பிடிப்பை விடுத்து, நமது எதிர்நோக்கு, நம்பிக்கை, மற்றும் அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதன்மூலம் அவற்றை மறைபோதக சேவைக்கு தாராளமாக வழங்கிட நமக்கு இவை சவாலாக அமையட்டும்.

> மறைபோதகராக இருப்பது திருஅவையில் பணி செய்வதற்கான ஒரு அழைப்பு. கடவுளிடமிருந்து அவை கொடையாகப் பெறப்பட்டவை. அதைப் பிறரோடுப் பகிர்ந்துகொள்ளவேண்டும்
>
> *திருத்தந்தை பிரான்சிஸ்*

**இன்றைய இறைவார்த்தை:**

சீராக்கின் ஞானநூல் 1: 2, 2:21-23

திருப்பாடல்: 90: 3-6, 12-14,17

கொலோசையர் 3: 1-5, 9-11

லூக்கா 12: 13-21

INTERNAL CIRCULATION ONLY
BUL 31/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 18 ஆம் ஞாயிறு | 3 ஆகஸ்ட் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்: சமுதாயம் – இறைவாக்குரைத்தல் காணக்கூடிய ஒத்துழைப்புக்கு அழைப்பு



# நமது நம்பிக்கையை எதிரொலித்தல்

இன்று மறைக்கல்வி ஞாயிறு, மறைபோதகம் மற்றும் மறைக்கல்வி பணிக்குழுவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் ஒருநாள். இந்த நாளை தனிப்பட்ட வகையில் பின்பற்றக் கேட்டுகொள்வதன் மூலம் அடுத்த தலைமுறைக்கு நமது நம்பிக்கையைக் கடத்த வேண்டிய கடமையைப் பற்றி சிந்திக்க திருஅவை நம்மை அழைக்கிறது. மறைபோதகம் குறித்த நமது கருத்துகள் மற்றும் அணுகுமுறைகளை ஆராய்ந்தறிய இது ஒரு நல்ல நேரம்.

மறைபோதக வகுப்பறைகளில் வாரத்திற்கு ஒரு முறை நடப்பது மறைபோதகம் என்று நீங்கள் நினைத்தால் நிச்சயமாக இல்லை. இன்று திருஅவையிலும், சமூகத்திலும் நடக்கும் அனைத்திலும் மறைபோதகத்தைப் பற்றி ஏதேனும் அர்த்தம் உள்ளதா